



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்களைத் தேடி

தீரன்



மித்ர வெளியீடு

சிட்னி–சென்னை–மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mithra Books
ISBN 1876626 186

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as permitted under the Copyright Act, No Part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form, or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by
**Dr. Pon. Anura**

Production Editor
**ESPO**

## VERGALAI THEDI

An anthology of 35 new poems

by

**Theeran**

First Edition
8th April, 1999

Cover Design
Pugazhenthi

Made in India by Mithra Book Makers

Mithra Publications

1/23 MUNRO STREET
EASTWOOD 2122
AUSTRALIA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024
INDIA

39 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

மித்ர : 28
முதற்பதிப்பு : ஏப்ரல், 1999

விலை : ரூ. 30.00
பக்கங்கள் : 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்ந்த
நாடுகளிலே
முகமிழந்த
மனிதர்களாக
வாழ்ந்தாலும்,
பிறந்த
மண்ணின்
வேர்களைத் தேடி
அலையும்,
இனமானமுள்ள
தமிழர்களுக்கு

இது

**படையல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

கவிஞர் தீரன் என் தம்பியரில் ஒருவர்.

சிறுமைகளைச் சாடுவதில் அசகாயசூரன்.

சமுதாய சின்னத்தனங்களைக் கண்டு குமுறும் அவர் உள்ளத்திற்கு, அவர் பேனாவே ஆறுதல் தரும் மருந்து.

எப்போதும் சமுதாயத்தின் மீது கேள்விக் குறியுடன் வாழும் தம்பி தீரன், தனக்குப் பொருத்தமான சட்டத்துறையைத் தேர்ந் தெடுத்து, லண்டனில் மூன்றே ஆண்டுகள் படித்து முடித்த நிலையில், கல்வியை இடை நிறுத்த வேண்டிய இக்கட்டுக்குள்ளானார்.

சூழ்நிலை காரணமாகத்தான் சொந்த நாட்டில் உயர் கல்வி பெற முடியாமற்போன தீரனுக்கு, லண்டனிலும் அதிர்ஷ்டம் கையை விரித்து விட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் பாரிஸ் வந்தவர், பாரிஸையே தனது வாழ்விட மாகவும் கொள்ளவேண்டியதாயிற்று. இந்நிகழ்வு துரதிர்ஷ்டவசமானது.

பட்டக் கல்வியில் அதிர்ஷ்டம் காலைவாரி விட்ட போதிலும், அறிவு சார்ந்த நூல்களை, கிடைத்த நேரங்களில் தீரன் படிக்கலானார். அக் கல்வியினால் பெற்ற அறிவும் அனுபவங்களும், சிறுமைகளைச் சுட்டெரிக்கும் நெருப்பாக, தீரன் கையில்!

பாரிஸில் மிகப் பெரிய புத்தக விற்பனை நிறுவன மொன்றில் பணி வாய்ப்புக் கிடைத்தமை தீரனுக்கு ஒரு வரப்பிரசாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக விற்பனை நிலையம் எனும்போது, யாழ்ப்பாண நகரின் பெரிய புத்தக விற்பனை நிறுவனமான 'பூபால சிங்கம் புத்தக சாலை' நினைவுக்கு வருகிறது.

யாழ்— உஸ்மானியாக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோதே, பூபால சிங்கம் புத்தக நிறுவனம் தீரனை அரவணைத்து அறிவுக்கும், சற்றே வயிற்றுக்கும் பெருந்தன்மையுடன் உதவியது.

பகுதி நேர ஊழியராக அங்கு பணியாற்றியதை, நன்றியுடன் தீரன் நினைவு கூருகின்றார்.

எனது நண்பரும், தீரனின் தாய் மாமனாரும் யாழூர் துரை என்ற பெயரில் நன்கு அறியப் பட்டவருமான திரு. கே. ஏ. தர்மலிங்கம் அவர்கள் அப்புத்தக நிறுவனத்தில் பொறுப்பான பணியில் இருந்தார். நமது கவிஞனின் புத்தகப் பரிச்சயத்திற்கும் முற்போக்குச் சிந்தனைக்கும் எனது நண்பரே அத்திபாரம் இட்டுக் கொடுத்தார் (நண்பர் ஒரு நாடகாசிரியராவர்)

இப்போது 'மித்ர' வெளியீடாக நூலாக்கம் பெற்றுள்ள 'வேர்களைத் தேடி' தீரனின் இரண்டாவது கவிதை நூலாகும்.

தீரனை அவர்தம் இலட்சியக் கோட்டைக்கு இட்டுச் செல்லும் வெற்றிப் படிகள். அவர் படைப்புகள். படிகள் மேலும் வளரட்டும்,

சசிபாரதி

87/1D, 5வது தெரு
இந்தியன் வங்கிக் குடியிருப்பு
திருச்சி—21.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

கருவில் சுமந்த அன்னை
கால்பதித்து நடந்த மண்
இதயத்தில் ஏந்திய அன்பு
தோளோடு தோள் நின்ற—நட்பு,
இவையனைத்தும் நினைவலைகளாக
என்றென்றும் பரிணமிக்கும் மனதிலே...

ஆம்... அந்த நாட்கள் இனிமையானவை — எம் இதயக்கூட்டை விட்டு விலகாதவை. காலங்கள் கரைந்து போனாலும் கடுகளவேனும் மாறாதவை. அந்த நினைவுகளைச் சுமந்து கொண்டு புலம் பெயர்ந்து வாழுகின்ற எண்ணற்ற ஈழத்தமிழர்களின் ஏகோபித்த ஏக்கம், சுதந்திரக் காற்றை என்று சுவாசிப்போம் என்பதே. அவ்வகையில் எழுகின்றத் தாகமே இலக்கிய தேடல்கள்.

கடல் கடந்து அந்நிய தேசங்களில் தம்மை அடைக்கலமாக்கிக் கொண்ட ஈழத்து மைந்தர்கள் தம்மால் முடிந்தளவுக்கு இலக்கியம் படைக்கிறார்கள். கவிதைகள் புனைகிறார்கள். அதை நூலாக அச்சுருவிலும் கொணர்கிறார்கள்.

சுதந்திரம் பெறப் போராட்ட களத்தில் உள்ள எண்ணற்ற இளம் நெஞ்சங்களுக்கு உந்து சத்தியாகவும், புலம் பெயர்ந்ததால் மண்ணின் வாசனை அறியாத சிறார்களுக்கு இன்றைய வேர்களின் ஆழம் நாளைய மரத்தின் நிழலில் புலப்படுவதற்கு இவ்வகையான ஆக்கங்கள் மிக மிகத் தேவையே! அவ்வகையான முயற்சிகளைச் செய்கின்ற அறிவு ஜீவிகளுக்கு எம் நெஞ்சார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.அன்றைய யாழ்மண்ணில் போர்க்காற்று மெல்லியதாக வீசிக் கொண்டிருந்த காலம். அறிவு ஜீவிகள் கூடுமிடமாக பரிணமித்த பூபாவசிங்கம் புத்தகசாலையில் கடமை யாற்றிய வேளை. எனது நண்பர்களான தர்மராஜா, டேவிற்விகோரி, நான் மூவரும் இணைந்து ஈழமண்ணின் எழுத்தாளர்களின் நவீனங்களை மாத நாவலாக பதித்து வாசகர்களுக்குக் குறைந்த விலையில் கொடுத்திட முடிவு செய்தோம். அதன்படி நான்கு நாவல்களையும் பதிப்பித்து விழா எடுத்து வாசகர்களுக்கும் வழங்கினோம். எமது இவ்விலக்கியப் பயணம் நெடும்பயணமாகத் தொடர அதற் குண்டான ஆக்கப்பணிகளை விரைவாக செயல்வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து வந்த வேளை. போர் மேகம் தீவிரமாக சூழத் தொடங்கியது. அது அடித்த வேகத்தில் எமது இலக்கிய தாகத்தால் எழுந்த கோட்டைகள் யாவும் தகர்ந்தன; நாசமாகின.

அதிகாரத்திலுள்ள ஆளும் படையும், அமைதி காக்க வந்த அண்டை நாட்டுப் படையும் அழித்தொழிப்பதில் யார் பெரியவர் என்று கோதாவில் இறங்கி, வேற்று மொழிக் கலப்போ, வேற்று இனப் பிணைப்போ இன்றி தூய்மையான செந்தமிழ் வளர்த்து கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் தனித்து நின்ற தமிழினத்தை —மானம் காத்து போராடி நின்ற ஓர் தன்மான இனத்தை— சின்னாபின்னமாக சிதைத்து, நாடுகள் பலவற்றில் அகதிகளாக்கிய கைங்கரியத்தால் எமது வேகத்தில் தடைக்கற்கள் தோன்றின. மனது சலித்தது; இதயம் கனத்தது. ஆனாலும் புதுப்புது இலக்கிய வடிவங்கள் எம்மவரால் வெளிக்கொணரு வதைப் பார்க்கும் இவ்வேளை புது உற்சாகம் பிறக்கிறது.

1989—ல் எஸ்.கே. ரவீந்திரனின் (தீரன்) "சுடலைகளாகும் நகரங்கள்" என்னும் கவியாக்கத்தை வெளியிட்டோம். அதன் பின்பு பத்து ஆண்டு இடைவெளியில் "வேர்களைத் தேடி" என்னும் இக்கவிதைத் தொகுப்பை மித்ர வெளியீடாக இப்போது உங்கள் திருக்கரத்தில் தவழ விட்டுள்ளோம்... இப்பணி மேன்மேலும் தொடரும் என்பதை அறியத் தருவதில் மகிழ்கின்றேன். புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எம் மண்ணின் நினைவுகளே பசுமையாக எம் நெஞ்சங்களை நிரப்பியுள்ளன. நாம் விடும் மூச்சுக் காற்று எம் தேசத்தின் விடுதலைக்காக போர்க்களத்தில்; நின்று இன்றுவரை போராடும் வீரத் திலகங்களை தென்றலாக தழுவிச் செல்லும் என்றெண்ணி நெஞ்சம் நிமிர்த்தி நிற்போமாக!

- *யாழூர் துரை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரை

கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறியது இன்று ஈழத்துத் தமிழர்களைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, தலைநகர் கொழும்பைக்கூடப் பார்த்திராத மக்கள் இன்று உலகெங்கும் பலநாடுகளில் பரந்து வாழ்கின்றார்கள். பல இனம்–மொழி–பண்பாடுகளின் மத்தியில் சிக்குண்டு பெரும்பாலும் அகதிகளாக வாழ்கின்றார்கள். அவர்கள் எதிர்நோக்கும் அவலங்கள் அநந்தம்...

இன்ற, ஐரோப்பாவில் வாழும் இளந்தலைமுறையினர் தமது அவலங்களையும் அநுபவங்களையும் வெளிக்கொணர சிற்றேடுகள் வெளியிடுகின்றனர். அவற்றிலே அதிக இடம் பிடிப்பவை புதுக் கவிதைகளே. இலகுவாகவும், எளிமையாகவும் தமது உணர்வுகளை வெளிப்படுத்த புதுக்கவிதை என்ற வாகனமே வசதிச் சவாரி செய்ய தோதாக அமைகின்றது.

நண்பர் தீரன், அங்கு பல சிற்றேடுகளில் எழுதிய 35 கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சட்டப் படிப்பிலே தம் கவனத்தைச் செலுத்திவரும் தீரன், புதுக்கவிதை எழுத முனைந்தது மண்ணின் வேதனை நிகழ்வுகளே.

நாம் புலம் பெயர்ந்து வாழும் சூழல் மேலும்
பல மன அழுத்தங்களைத் தந்துள்ளன.
இனத் துவேசம் — வேலைப்பளு— வேலையின்மை—
அந்நியம்—தனிமை போன்றவை...

என பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றார் தீரன்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் என பாரதி பாடினான். ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் வெள்ளிப்பனிப் பாதையிலும் கூதல் குளிரிலும் வாடி வதங்கித்தான் வாழ்வு நடத்துகின்றனர். வேலை; வேலை; மேலும் வேலை. 12 மணித் தியாலங்களுக்கு மேலும் வேலை பார்க்கின்றனர். நவநாகரிக வசதிகள் அனைத்தும் இருந்தாலும் இயந்திர மனிதர்களாக இயங்குகின்றனர். வீட்டுக் காவல் போன்று நகரச் சிறைவாழ்வு; தங்கக் கூண்டில் வாழும் கிளி போன்ற வாழ்வு. மனித சுதந்திரம் அதீதம். ஒவ்வொரு பிரஜையின் நலனிலும் அரசு அக்கறை காட்டுகின்றது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்த முறைமை வெள்ளையர்க்கு ஏற்றவை. நம் கலை–கலாசார–சமய–பண்பாடுகளுக்கு இவை ஏற்றவையல்ல. இவற்றையெல்லாம் தீரன் நன்குணர்ந்திருக்கின்றார். அதனால்தான், 'ஆண்ட பரம்பரை' என்ற கவிதையில்,

விந்தைமிகு உலகமிது விடிவதுதான் என்று?
சொந்த மண்ணின் துயரநிலை கலைவதுதான் என்று?
சொத்து சுகமென்று இங்கு புலம்புகின்றார் நின்று
இந்த மண்ணும் எத்தனை நாள்! அனுப்புவாரோ என்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன் நிதர்சனமாகவும், தூரதிருஷ்டியுடனும் 'இந்த மண்ணும் எத்தனை நாள்?' என்று அழுத்தமாகப் பதிக்கின்றார். எத்தனை ஆண்டு, எத்தனை மாதம் என்றில்லாமல் எத்தனை நாள் எனக் குறிப்பிடுகிறார். அங்குள்ள உண்மை நிலைதான் அது! என்றாவது ஒருநாள் திரும்பக்கூடியவர்கள் என்ற நிலைக் களனை உணர்ந்து வாழ்பவர்களே ஏற்றம் பெறுவர்.

இல்லாது, 'கொண்டாட்டம் குடியாட்டம் குதூகலிப்போம் நித்தம்' என்று வாழ்பவர்களைச் சாடுகிறார் கவிஞர். அப்படியொரு கூட்டமும் பாரிஸ் நகரில் வாழுகின்றது. பன்னாட்டுக் குடி மக்கள் செறிந்து வாழும் பாரிஸ் நகர் நவநாகரிக வளர்ச்சியில் எவ்வளவு முன்னேறியுள்ளதோ அதேயளவு களியாட்டம், கொலை, கொள்ளை முதலிய கொடூரச் செயல்களிலும் அதி விரைவாக முன்னேறி வருகின்றது. அதில் நம் ஈழத் தமிழர்களும் முன்னணி வகிப்பதுதான் மிகவும் வேதனை தரும் செய்தியாகும்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரம். வானொலி - தொலைக்காட்சி செய்திகளிலெல்லாம் ஒரு செய்தி– உள்ளத்தை உறையச் செய்யும் செய்தி- அலறுகின்றது.

13வயது ஈழத் தமிழ்ப் பெண். பள்ளியிலிருந்து வீடு திரும்புகிறாள். கதவைத் திறக்கிறாள். உடன் மூவர் உள்ளே நுழைகின்றனர். தனியாக இருந்த அப்பெண்ணை அச்சுறுத்தி வீட்டிலிருந்த நகை– பணம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவள் அணிந்திருந்த நகைகளையும் பறித்துக் கொண்டு அதற்கு மேலும் ஒரு கொடூரமான செயல். அவளைக் கற்பழித்து, கொலையும் செய்து வெளியேறுகின்றனர். இது பகல் செய்தி. மாலை மீண்டும் ஒரு செய்தி! அவர்களில் ஒருவன் அன்றே பிடிபடுகின்றான். அடுத்து மற்றவர்களும். அதிசயம் ஆனாலும் உண்மை. அந்த மூவரும் ஈழத் தமிழர்கள். உண்மையானாலும் நம்ப முடியாத செய்தி.

இப்படியான வன்முறைகள் வளராது தடுக்க தீரன் போன்றவர்கள் கவிதை மூலம் தம் உணர்வுகளை பலரும் அறியச் செய்கின்றனர்.

இதோ 21– ம் நூற்றாண்டு வரப் போகின்றது. புலம் பெயர்ந்த தமிழர்கள் நம் கலை– கலாசார விழுமியங்களைப் பேணினால் நம் சந்ததி தலை நிமிர்ந்து வாழ முடியும். கலாசாரச் சிதைவுகளிலிருந்து தப்பலாம். இது ஒன்றுதான் நாம் செய்யக்கூடிய நற்பணியாகும். 21–ம் நூற்றாண்டின் கால் கூறுவரைதான் தமிழ்மொழி பேசும் தமிழர்கள் இருப்பார்கள். அரைக் கூறில் நிச்சயம் தமிழ் பேசுவோர் அரிதாகி விடுவர். நம் கலாசார விழுமியங்களாவது மிஞ்சுவதற்கு இனி ஒரு விதி செய்வோம்!

6.04.99 இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இவ்விருபதாம் நூற்றாண்டில் புதிய சிந்தனை மலர்விற்கு பாரதி காட்டிய புதுக்கவிதை வழி மிகவும் பயனுடையது. பொதுவுடமைக் கருத்துகள் சமுதாயத்தைச் சென்றடையவும், கடவுளையும், அரசர்களையும் துதிபாடி வந்த பழம் கவிதை மரபு மாற்றமடையவும் வழி கோலியது. இன்று எமது விடுதலைப் போராட்ட உணர்வுகளை அதிகம் புதுக்கவிதையே பதிவு செய்து கொள்கிறது.

என்னை எழுதத் தூண்டிய காரணி என் மண்ணின் வேதனை நிகழ்வுகளே. மனிதரிடையே நிலவும் அறியாமை, அடிமைத்தனம் போன்ற பேதவுணர்வுகள் மனித வாழ்வை மேலும் கீழ்மைப்படுத்தியுள்ளன.

நாம் புலம் பெயர்ந்து வாழும் சூழல் மேலும் பல மன அழுத்தங்களைத் தந்துள்ளன. இனத் துவேசம், வேலைப் பளு, வேலையின்மை, அந்நியம், தனிமை போன்றவை புலம் பெயர்ந்து வாழும் அனைவருக்கும் பரிச்சயமான ஒன்றே. நான் சந்தித்த, கேட்ட விடயங்களை கருவாக்கி நான் பெற்ற தமிழ் அறிவைப் பற்றிக் கொண்டு கவிதை உலகை வலம் வருகின்றேன். புலம்பெயர் வாழ்வில் எமது இன்னல்களை வெளிக் கொணரும் வடிவமாகக் கவிதையை விரும்பினேன். இன்று நம் இலக்கியங்களில் புலம் பெயர் இலக்கியங்கள் புதிய அந்தஸ்தைப் பெற்றிருப்பது எம் தமிழுக்குக் கிடைத்த மற்றுமோர் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இரண்டாவது கவிதைப் பதிவாய் வெளிவரும் 'வேர்களைத் தேடி...' எனும் தொகுதி பெரும்பாலும் அவ்வப்போது பத்திரிகைகளுக்கும், வானொலிகளுக்கும் எழுதிய கவிதைகளின் தொகுப்பே. நீண்ட காலத்தின் பின் வெளிவரும் இத்தொகுதியில் உள்ள கவிதைகள் என்னோடு பழகியவர்களை மிகவும் கவர்ந்தமையால் இவற்றைப் புத்தகமாக வெளியிடவேண்டும் என்ற எண்ணம் உருவாகியது.

இந்த தொகுதிக்கெனச் சில கவிதைகளைப் புதிதாக எழுதும்படி எஸ்.பொ. ஆற்றுப்படுத்தியமையால், சில கவிதைகளைப் புதிய பார்வையிலே எழுத நேர்ந்தது. அவர் பொறுமையுடன் எனக்குச் செய்த வழிகாட்டல், பேருதவியாக அமைந்தது. அவர் எழுத்துலகச் சித்தர். மயன்.

இக்கவிதைத் தொகுதி வெளிவர பேருதவி புரிந்த எனதன்புக்குரிய தாய்ச்சகோதரன் திரு. யாழூர் துரை அவர்களுக்கும் என் சகோதரன் திரு. எஸ்.கே. இராஜென் அவர்களுக்கும், நெஞ்சில் அன்பைப் பதித்து வாழ்த்துரை வழங்கிய யாழ் ஈழநாடு சசிபாரதி அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட உதவிய எழுத்தாளர் திரு. எம்.ஏ. ரஹ்மான் அவர்களுக்கும், எனது கவிதை உணர்வுகளை வளப்படுத்தி, ஆலோசனைகள் வழங்கிய கவிஞர் அருந்ததி அவர்களுக்கும், செல்வன், ரஜெந்தன், திரு. கணேஸ், திரு. முத்து அவர்களுக்கும் என் இனிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாரிஸ்
4.4.99

தீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

"மரபு மாறும்; மாறாதும் இருக்கும். இது முரணல்ல. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல". மரபு மாறும். வளர்ச்சியும், அது தோற்றிய தேவைகளும் புதியன புகுதலுக்கான காரணிகள். புகுதல் நிகழாவிட்டால், புகுத்துதல் ஆகும். இந்த மாற்றம் பரிணாமத்தினதும், வளர்ச்சியினதும், ஏன் முன்னேற்றத் தினதும் நியதியும். ஓர் இனத்தினதும், அதன் அடிப்படைக் கௌரவ அடையாளமாக இருக்கும் மொழியினதும் மாறா அம்ஸம் மாறாதே இருத்தல் வேண்டும். பிறிது பிறிதாகல் ஆகாது. பிறிதானால், சுயாதீனமும் விடுதலையும் இல்லை. விடுதலைக்கு எதுவும் ஈடில்லை. விடுதலையையும் சுயாதீனத்தையும் அடையாளமிடும் மரபு மாறாது. என் எழுத்து ஊழியத்திலே நான் பயிலும் மதம் இதுவே. இதனால், புதிது படைக்கும் அதிகாரம் என் வசம் என்கிற ஆநந்த!

"புதுமை அநுபவங்களை அகலிப்பதில் பிரஞ்சுக்காரன் விண்ணன். 'வேர்ஸ் லிப்ரே' அவர்கள் வைத்த கோஷம். அதற்கு ஓர் இலக்கிய மரியாதை பாய்ச்சி டி.எஸ். எலியட் ஆங்கிலமும் தந்தார். கவிஞர் மட்டுமின்றி. விமர்சகரும் என்கிற தத்துவமும் அவருக்குத் துணை நின்றது. பின்னர் எலியட் இலக்கியத்திற்கான நோபல் பரிசினால் மகிமை பெற்றார். ஒரு புதிய கோஷத்தின் முதன்மை ஆதாரணைகாரர் என்கிற பெருமை சுகித்தலிலே அடர்த்தி மோகம். தமிழிலே 'புதுக்கவிதை'யின் அநியாய–அவசர–அமோகப் பரம்பல். தமிழ்க் கவிதையின் மரபுகள் பேணிய கம்ப சூத்திரத்தை வசப்படுத்துவதில் சோம்பல் ஓம்பியவர்களும் களத்திலே குதித்தார்கள். 'இங்கிலாந்திலே செய்தது; ஆங்கிலத்தில் வந்தது" என்கிற மோகமும். புரிந்து கொள்ளாத தாஸத்தனமும் இப்படைப்புகளிலே தூக்கலாகத் துள்ளின. குறுக்கே வலை கட்டாது நடத்தப்பட்ட இந்த Tennis விளையாட்டு என் ரஸனைக்கு ஒத்துப் போகவில்லை. ஓசை–இசை–வீச்சு–புதுமை–செழுமை ஆகிய சகலவற்றையும் பாரதி, மரபுக் கவிதைகள் என்கிற சட்டகத்திற்குள் நின்று சாதிக்கவில்லையா? புதுக்கவிதை வியாபாரிகள் பாரதியிலும் பார்க்கத் கொம்பு முளைத்தவர்களா? பாரதியின் பின் தமிழக கவிதைக்குச் செழுமையும் நெகிழ்ச்சியும் பாய்ச்சியவன் ஈழத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மஹாகவி' என்பது என் ஈமான். மண்ணின் மைந்தர் பயின்ற தமிழுக்குக் கவிதா நேர்த்தி பொருந்தியது அவனுடைய ஊழியம். அவன் என் தோஸ்த். புதுக்கவிதை குறித்து நீளமாக விவாதித்தோம். புதுக்கவிதைகளை வரவேற்பதில் அவரும் தயக்கமும் பஞ்சியும் பாராட்டினார். புதிய கோஷங்களை வைத்து, புதிது பண்ணுவதான பாவலாவிலே, கவிதா ஆற்றல்களைச் சோரம் போக்குகிறார்கள் என இருவரும் அவதிப்பட்டதும் உண்டு. புதுக் கவிதைக்கு ஆதரவாக இலக்கணங்களும், நியாயங்களும், மேலை நாட்டு முயற்சிகளின் சாங்கங்களும் முன்வைக்கப்பட்ட அளவுக்கு, காத்திர மான படைப்புகள் முன்வைக்கப் படவில்லை. மோசமான வசனங்கள், சித்தம் போக்கிலே உடைக்கப்பட்டு, புதுக்கவிதைகளாக வலம் வந்தன.

"முன்வைக்கும் விமர்சனம் என்பது வேறு, வாசிப்புப் பழக்கம் என்பது வேறு. என் இலக்கிய மதத்திற்கு இசைவான இலக்கியங் களை மட்டுமே வாசிக்கும் முற்போக்கு நாகரிகம் அறியாத பாமரன் நான். புதுக்கவிதைகள் வாசிக்கும் பழக்கத்தை துண்டிக்க வில்லை. காலங்கள் மாறின. புதுக்கவிதை வடிவம் தேவையாயிற்று, நேற்றைய தலைமுறையினர் பாராட்டிய கவிதைகள்'மரபுக் கவிதை கள்' ஆயின. புதுக்கவிதையே இயல்பாயிற்று. 'இளங்கன்று பய மறியாது' இனமானக் கௌரவமும் விடிவும் பற்றிய தேடலிலே, ஒருவகை ஆவேசமும் மூர்க்கமும் இருக்கும். விடுதலை உணர்வு சமர்க்களத்திலே போர் நெறியாகும். போரிலே வெற்றி சாதித்தல் வெறி—அந்த வெறி ஆவேசம்— மூர்க்கம் ஆகியவற்றின் திரட்சியும், சமர்க்களப் போராளிகளின் பங்காளராய் வாழும் கவிஞர்களுடைய படைப்பு களிலே சத்திய முனிவின் மூர்க்கம் கனன்று கொண்டிருக்கும்."

யுகபாரதியின் கவிதை சஞ்சாரத்திற்குள் அழைத்துச் செல்லும்பொழுது, மேற்கண்டவாறு கணையாழியில் எழுதினேன். பொருத்தம் கருதி அவற்றை இங்கு மீள வலியுறுத்துகிறேன்.

தமிழ்க் கவிதைக்கு இரண்டாயிரம் ஆண்டு வரலாறு உண்டு. கவிதையின் வடிவங்கள் காலத்தின் புதிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றமடைந்து வந்துள்ளன. இவற்றை 'வழுவல காலவகையினானே' என ஏற்றுக் கொள்ளதலும் தமிழ் மரமே. ஆனால், இந்த நூற்றாண்டின் இறுதிக் கந்தாயத்திலே, தமிழ்க் கவிதைத் துறையில் மூர்க்கமான கட்டுடைத்தல் நிகழ்ந்துள்ளது. கட்டுடைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சேபனைகளின் பதிவுகள் மட்டுமல்ல. அது வளர்ச்சிக்கான திமிர்த்தலாகவும் இருக்கலாம். நிகழும் கட்டுடைத்தல் புதிய வடிவங்களுக்கான தேடல்களாகத் தோன்றவில்லை. நிராகரித்தல் பிரதான்யம் பெறுகிறது. இருந்தாலும், பாடுபொருள்கள் சார்த்து ஓர் அகலித்தலையும் அடர்த்தியையும் இது சாதித்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. அகலமும் அடர்த்தியும் புதிய வடிவங்கள் மனை கோலுவதற்கான சாத்தியங்களை நிராகரிக்கவும் இல்லை.

புலம் பெயர்ந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் பலர் கட்டுடைத் தலுக்கு உள்ளான கவிதையையே தமது இலக்கியப் படைப்பிற்கான தவடிவமாகக் கைப்பற்றுகிறார்கள். இன்று, சகல விதிகளையும் இழந்து நிற்கும் அதன் கோலம், அவர்களுக்கு வசதியானது. அந்நியக் கலாசாரங்களுக்கு மத்தியிலே பேதப்பட்டு நிற்கும் அவர்கள், இலக்கிய ஆர்வத்தையும், அதனால் ஏற்படும் படைப்பு முனைப் பினையும்கூட, இனத்துவ அடையாளம் தேடும் பயணத்தின் ஓர் அம்ஸமாகவே சம்பாவனை செய்கிறார்கள். இதனைப் புரிந்து கொண்டால், அவர்களுடைய ஆக்கங்களிலே ஒன்றுதல் சாத்திய மாகும்.

இந்தத் தொகுதி சம்பந்தமாகத் தீரனுடன் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களிலே பேச நேர்ந்தது. இலக்கியக் கலந்துரையாடல்கள் புலம்பெயர்ந்த இளம் கவிஞர்களுக்கு மிகவும் பயனுடையன வென்பதைப் புரிந்து கொண்டேன். தமிழ்நாட்டிலே வெளிவரும் புதுக்கவிதைகளின் போக்குகளை அறிந்து கொள்வதிலே அவர் மிகவும் ஆர்வம் காட்டினார். பயனும் அடைந்தார். இதனால், இத் தொகுதிக்காகவே சில புதிய கவிதைகளை இயற்றிப் பொலிவு சேர்த்தார். இச் சேர்த்தல், கவிதைகளின் வகைகளைப் பெருக்கி யுள்ளது. அவர் மேலும் வளர்ந்து, தமிழ் ஊழியத்திலே நிச்சயமான பங்களிப்புச் செய்ய வாழ்த்துகின்றேன்.

எஸ்.பொ.

சென்னை.
8-4-99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பன்னாடைகள் ... 17
எழுதுகோல் ... 19
அடக்குமுறை ... 21
நல்ல ... 23
சுவர்கள் ... 25
இனவாதம் ... 27
கேள்வி ... 29
தேடுங்கள் ... 31
மறதிக்காரன் ... 33
புகழ் ... 35
புத்தாண்டு ... 37
ஆண்ட பரம்பரை ... 39
மலர்கள் ... 41
'கொட்டிய எக்கக்' ... 43
சம்பளம் ... 45
மது ... 47
பொருள் இல்லார்க்கு ... 49
வருங்கால சிட்டுக்கள் ... 50
தொடர் கதை ... 51
வார்த்தை ... 52
வளியே ... 55
வினையறுப்பீர் ... 58
புதிய சுலோகம் ... 60
இதயம் ... 64
இன்னும் வாழ்கிறார்கள் ... 66
வாழ்க்கை ... 67
பணம் ... 69
வேர்களைத் தேடி ... 73
அக்கினி ... 76
உன்னால் முடியும் பெண்ணே ... 79
காதலி ... 81
எனக்கொரு முகம் தாருங்கள் ... 87
யூலை 83 நினைவு கொள்ளல் ... 90
நா(ய்) கடிக்கும் கவனம் ... 94


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாடைகள்

சுழன்றடிக்கும்
சோளகக் காத்தில்
பட்டென விழும்
பன்னாடைகளை
எடுத்துப் போவர்
அடுப்பு மூட்ட.

பனை வளரும்
யாழ்ப்பாண மண்ணில்
துணையாகும்
பன்னாடைகள்
இற்றுப் போயினும்
நெருப்பை
பற்ற வைக்க
உதவுவன.

இரு மரபும்
தூய்ய வந்த
வேளாளத்
திருமகளை
இல்லாளாய்
எதிர்பார்க்கும்

அவனுக்கு வேலை
மீன் கழுவும்
தொழிற்சாலை!

டாலரிலே சீதனமும்
தரந்தரமாய்
வசதிகளும்
நிரந்தரமாய் பெறுவதற்கு
தரகாகும்
திருமணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் கிழிய
பெண்ணுரிமை
வரலாற்றை
சொன்னாலும்
நாய் விடவும்
கீழான
நடத்தைகிகிது
சாட்சியமாம்.

மண் இழந்து
மதிப்பிழந்து
பனை வளரா
பனி விழும்
அந்த நாட்டில்
அகதி நீ.

ஆனாலும்
பெரிசாச்சோ சாதி
அவமானம்
நேர்ந்ததே மீதி.

உதடுதிர்க்கும்
புன்னகைக்கு
ஒப்பாகா
சீதனத்தை

பிடிவாத
நோக்கோடு
பெறப்பார்க்கும்

இந்தப்
பன்னாடைகள்
அடுப்புக்கும்
உதவாது
அறிவுக்கும்
உதவாது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுது கோல்

பறவை இறகும்
பனை ஓலையும்
நமது பழைய பரம்பரைகள்.

மனிதரைப் போலவே
நாமும்
பரிணாமம் அடைந்து
நாகரீக உலகிற்கு
அறிமுகமானோம்.


கடந்தகால
வரலாறுகளை...
சிந்தனைகளை...
சுவடுகளை...
வரைவுகளாக்கி
வருங்காலம்
அறிய வைத்தோம்.

இலட்சிய வாதியின்
கை விரல்
இடுக்கிலிருந்து
கால
இருளை விரட்ட
தினமும் உறுதியாய் எழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சத்தம் போடாத
சிறு துப்பாக்கிகள்
பத்திரிகையை 'களமாக்கி'
சொல்லை 'வேட்டாக்கி'
சமர் புரியும் தர்க்க வாதிகள்.

நாம் மாற்றம் தேடி...
மக்கள் இதயம் நோக்கி
கருத்தாய்...
சுட்டு நிற்பது
வீழ்ச்சிக்காக அல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்கு முறை

*தாய் வாயை மூடவைத்து*
*தனியுரிமை நிலை நாட்டி*
*தரப்படுத்தல் கொள்ளி கொண்டு*
*கல்விதனை எரித்தார்கள்.*

*உரிமைகளைக் குறிவைத்து*
*உருக்குலையக் கத்திரித்து*
*ஏன்? என்ற கேள்விக்கெல்லாம்*
*குரல் வளையை நெரித்தார்கள்.*

*குடியிருந்த நிலத்தையெல்லாம்*
*குண்டர் வைத்து பறித்தெடுத்து*
*பௌத்த நாடிதென்று*
*பறைசாற்றி நின்றார்கள்.*


*ஒப்பந்தங்களையெல்லாம்*
*ஒன்று கூடி கொளுத்திவிட்டு*
*கலவரப் புகைமூட்டத்தில்*
*குளிர்காய்ந்து கொள்வார்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகளில்
நஞ்சினைத் தடவிவைத்து
பிறதேசம் பொய்யுரைத்து
போர்உதவி பெற்றார்கள்.

தேர்தல்களில் மட்டும்
தார்மீகம் பேசிவிட்டு
வாக்குப்பெற மாறுரைத்து
வாக்கு மாறிநின்றார்கள்.

வரலாற்றைத் திரித்து
நாகரிகப் பொய்கலந்து
வரலாறு காணாத
இன வெறியை வளர்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்ல...

எனக்கு
அதிக நண்பர்கள்.
எல்லோருக்கும்
வழிகாட்டும்
சிறந்த நண்பர்கள்.
உலக பிரக்ஞை
உடையவர்கள்;
சமுதாய பிணியகற்றி
மானிடத்தின்
துயர் சாக
மனித வியர்வையில்
சிந்தனைக்கருவில்
உருவானவர்கள்;
உருவத்தில் சிறுத்தும்
உயர்கருத்தால்
உயிர் பெற்றும்
உலகை முன்னேற்றும்
உழைப்பாளிகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மொழிகளிலும்
முனைப்புடன் பேசி
எல்லோரையும்
சமப்படுத்த
போர் புரியும்
சிந்தனாவதிகள்;
நித்தம்
எம்
கரங்களில் கிடக்கும்
காலத்தின் பக்கங்களை
செப்பனிடும்
திருத்தல் வாதிகள்!

விலைகள்
இவர்களை
விலங்கிட்டாலும்
விற்பனைச் சிறையிலிருந்து
விடுதலையானதும்
மனித விலங்குகளை
தூள்.... தூளாய்
உடைத்து விடும்
உறுதி படைத்தவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்கள்

கலவைகள் சேர்ந்த
கற்சுவரைப் போலன்றி
மனித இனத்திற்கு
இயற்கையாய் குளிரூட்டும்
மண்சுவர்கள்-நாம்

ஓலைக் கிடுகளுடன்
ஒப்பந்தம் நடாத்தி
ஒவ்வோரு இரவும்
ஏழைகள் உறங்க
உறைவிடமாய்
வரையறுத்திருக்கும்
வாழ்க்கைச்சுவர்கள்-நாம்

அந்த
ஆணவச்சுவர்களைப் போல்
அதிகம்
உயரநினைக்காது
நம் இனத்தின் ஒற்றுமையால்
இயலுமட்டும்
உயர்ந்து நிற்கும்
இலட்சியச்சுவர்கள்-நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம்
அடக்குமுறைகளை
பிரயோகிக்கும்
சிறைச்சுவர்களாய் அல்லாது
காலமாற்றங்களாலும்
விஷஜந்துக்களின்
தீண்டலிலிருந்தும்
மக்களைக் காக்கும்
காப்புச் சுவர்கள்-நாம்

காலமாற்றத்தின்
அதிகாரவெள்ளத்தின்
அத்துமீறலினால்
அடிபட்டுப் போனாலும்
என்றோ ஒரு நாள்
அணைச்சுவராய் எழுந்து
ஆதிக்க வெள்ளத்தை
தடுத்து நிறுத்தும்.
நம்பிக்கைச் சுவர்கள்-நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இனவாதம்

யார் அணைப்பார்
இந்நெருப்பை?
அஞ்சி... அஞ்சி...
நெஞ்சுருக
ஆண்டாண்டாய்
நின்றெரிந்து
நம்மினத்தை
கருக்கிவிட்ட
இந்நெருப்பை
யார் அணைப்பார்?

ஆட்சி செய்த
அரசியலாளரெல்லாம்
ஊட்டி வளர்த்து
உயிர்களைவாட்டி
நீண்டு... நீண்டு
இன்னும் இருள் சூழ
உணர்வில்
ஊறி எழும்
இந்தப் பாழ் நெருப்பை
யார் அணைப்பார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கி ஒடுக்கி..
ஆளுமையால்
அடிமையுகம் படைக்கும்
கொடும் சுரண்டல்
முறை நீண்டு
நீளும்
இனவாதக் கரங்களினால்
நின்றெரிந்து
நித்தம்
மண் கருக்கும்
இந்த
முரண்
நெருப்பை
யார் அணைப்பார்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி

தெளிவில்லாத
தத்துவ வியாதிகளால்
தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்க்கை
எத்தனை பரம்பரைக்கு
சுமைகளாகின...


இன்னொருவரை நம்பி
இருளில் நடக்கும் கால்கள்!
''குருடர்கள் மத்தியில்''
ஒற்றைக்கண்ணன் எப்படியோ?...
அப்படித்தான் இன்னும் உலகம்!

முன்னொரு காலத்தில்
இடி, மின்னல், மழை
புயலைக் கண்டு
மக்கள் பயந்துகொண்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதோ அவை பற்றியல்ல!
மனிதத்தைத் தேடிப்
போனவர்கள் பற்றித்தான்!

கற்பனையை வாழ்வாக்கி
யதார்த்தத்தை உதைந்தோம்
உண்மையை மறுத்தொதுக்கி
பொய்மைக்குள் வீழ்ந்தோம்
இப்படியே நாம்
வாழவைத்தின்னும்
வர்க்கத்திற்கே இரையாகி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடுங்கள்


*சிந்தனைகளை*
*சொல்லிவிட்டு*
*சிலைகளாக நின்று*
*உலகைப் பார்க்கின்றனர்*
*மனிதர்கள் மாமேதைகள்;*
*திருந்தவே இல்லை.*

*வீதிகள் எங்கும்*
*அந்த மேதைகள்*
*பெயர்களாக நின்று*
*வழியைச் சொன்னார்கள்*
*அந்த மேதைகள்;*
*மனிதனோ*
*விழிக்கவே இல்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும்
தங்கள் அகங்களைத்
திறந்து
புத்தகங்களாக விரிந்து
விழிமலர்த்தி
நின்றார்கள் மேதைகள்;
மனிதன்
அங்கு
செல்லவுமில்லை.

கடைத் தெருவில்
சுடர்விளக்கோடு
மனிதனைத் தேடிய
''டயோஜினஸால்''
(கிரேக்க தத்துவஞானி)
காணமுடியாத
அந்த உண்மை மனிதன்
இன்னும் பிறக்கவுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறதிக்காரன்

வைத்திய மாத்திரையை உரிய காலத்தில்
உடல் சேர்க்காக் காரணத்தால்
நோய்முற்றிக் கிடந்தேன்.

சமைக்கும் உணவிலே உப்பு மிகப்போட்டு
எத்தனையோ இரவுகள்
உண்ணாமல் கிடந்தேன்.

'விசா'வை பாராமல் வீதியில் சென்றதினால்
போலீஸின் கண்பட்டு
சிறை பட்டுக் கொண்டேன்.

''அலாரம் வைக்காமல்'' ஆழ்ந்து தூங்கியதால்
செய்தொழில் இழந்து
திண்டாடித் திரிந்தேன்.

டிக்கட்டை விட்டிட்டு ரயில் ஏறிப்போனதினால்
செக்கரால் பிடிபட்டு
பலநூறு இழந்தேன்.

கடிதத்தை எழுதி தபாலில் சேர்க்காமல்
பதில் வருமென்று
எதிர்பார்த்திருந்தேன்.

திறப்பை நினையாமல் வெளியே போனதினால்
றூமெற்றை எதிர்பார்த்து
சாமம் வரை நின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படித்த பாடங்களோ எழுத வராமையால்
பரீட்சை பலவற்றில்
தோல்விகளைக் கண்டேன்.

சொன்ன விடயங்களை செயல் படுத்தாதிருந்ததினால்
மேலதிகாரியிடம்
வசைகளைக் கேட்டேன்.

இதையெல்லாம் கண்ணுற்ற என்னூர் உறவுகளால்
'மறதிக்காரன்' என்ற
பட்டைத்தைப் பெற்றேன்.

ஆனாலும்! ஆனாலும்! என்னுயிரில் கலந்தவளை
என் இனிய தேசத்தை
என்றும் மறவாமல் வாழ்ந்தேன்.

இந்த மறவாமை போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்

எத்தனையோ
உந்நத மனிதர்களை
நீ...
அழித்தொழித்துவிட்டாய்
உனக்கேன்
அப்படியொரு கவர்ச்சி?

என் வீட்டுக்கு
இருளைக் கூட்டி வந்ததே
நீ..தான்.

உனக்காக.
நான் இழந்தது
கொஞ்ச நஞ்சமல்ல
உன்னால்
போற்றப்பட்ட
என்
கோழைத்தனங்கள்
இன்று
இகழப்படுகின்றன!

உன்
சகவாசத்தால்
வெறி பிடித்து அலைந்தபோது
எத்தனையுள்ளங்களை
அடித்துப் பார்த்திருப்பேன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ!
காலம் என்னை
அடித்துப் போடுகிறது.

சமான்யன் உன்னைத்
தேடியலைந்து
திமிர்வதும் துவள்வதும்
நன்றோ?

சாமான்யன்
சரித்திர நாயகன்
ஆதல் வேண்டும்!
அவன் செயல் உன்னை
ஈர்த்திடல் வேண்டும்;
எங்ஙனம்...?

வரலாறு படைக்கும்
ஆசைத் திரியின்
தூண்டு கோலால்
நீ மாறல் வேண்டும்;
அதுவே
நின்பணி யாகட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு

வையகத்தின் இன்னுயிர்கள்
வாழ்வதற்கு வலுவுரைத்து
மெய்யாயொரு மாற்றம் வர
மலர்ந்து வா புத்தாண்டே...!

சென்றுவிட்ட ஆண்டுகள் போல்
செந்நீரைக் கேளாதே!
சுதந்திரமாய் உயிர்வாழ
சுவர்களைப் போடாதே!
திசையெட்டும் தீயாக்கி
தீமைகள் ஆக்காமல்
தினம்... தினம்... நீதியாய்
பூத்து வா புத்தாண்டே....!

படைகளைக் குவித்து எங்கும்
பலிகொள்ளும் நாளாக்கி - நீதி
குடைசாய்ந்து போகும்
கொடுமையை வளர்க்காதே!

பொதியினைச் சுமந்து நிற்கும்
போக்கிரியாய்த் திகழாமல்
புதியதோர் தீர்வுரைத்து
புதுமைசெய் புத்தாண்டே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் போனவரை
காண மனம் தவிக்கையிலே
வீணாக நீயும்
வழிமறித்து நிற்காதே.

போக்கிடம் தெரியாமல்
புலம்புகின்ற மக்களுக்கு
சாக்காடு காட்டாமல்
சகாயம்செய் புத்தாண்டே!

கறைபடிந்த நாளதனை
காலடியில் மிதித்துவிடு!
சிறை புகுந்த இளைஞருக்கு
செயல்துணிவைத் தந்து விடு!

மானிடத்தை ஒன்றாக்கி
தேசங்களை ஒன்றிணைத்து
ஒருலகம் என்றுரைக்கும்
ஒளி பகிர்வாய் புத்தாண்டே...
வேறுலகம் ஏகுமுன்னே
வெற்றி தா புத்தாண்டே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்ட பரம்பரை

வித்தை மிகு உலகமிது விடிவதுதான் என்று?
சொந்த மண்ணின் துயர நிலை கலைவதுதான் என்று?
சொத்து சுகமென்று இங்கு புலம்புகின்றார் நின்று
இந்த மண்ணும் எத்தனை நாள்! அனுப்புவாரோ என்று?

சாதி மத சாஸ்திரங்கள் இறக்குமதியிங்கு
சீதனப் பேய்களையும் ஏற்றி வந்தார் இங்கு
வகைவகையாய் மீன் மரக்கறிகள் வந்திறங்குமிங்கு
வந்த பாதை மறந்து போனவர்தான் மிஞ்சும்.

காணி பூமி விற்று வந்து அகதிகளாய் ஆனோம்
கண்ணுறங்கும் போது தன்னும் மண் நினைவைத் தேடோம்
கொண்டாட்டம் குடியாட்டம் குதுகலிப்போம் நித்தம்
திண்டாடும் எம்மக்களுக்கு உதவக் கரம் நீட்டோம்


சீட்டு வட்டியென்று தினவெடுத்த கூட்டம்
சுருட்டிக் கட்டிக் கொண்டு நாட்டை விட்டும் ஓட்டம்
கட்டிப் பவுண் சேர்ப்பதிலும் கதை கதையாய் நீட்டம்
நாட்டின் இன்னல் நிலை எதுவும் அறிந்திடாத வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாற்றும் இடங்களிலே வேற்றுமைகள் தோற்றம்
மற்றவனின் வாழ்வினிலே மண்ணை அள்ளிப்போட்டும்
எள்ளளவும் இதயமதில் இரக்கமில்லாக் கோலம்
இப்படியே வாழ்வு கண்டால் இனச் சரிவுதானே மிஞ்சும்?

நாகரீகச் சிறப்புடனே வாழும் பிரான்சு மக்கள்
நமது நிலை உணர்ந்து கருணை கொண்ட மக்கள்
நாங்கள் சொன்ன சொல்லே ஆண்ட பரம்பரைகள்
நாம் புரிந்தோமிங்கு சட்டம் ஏய்க்கும் செயல்கள்

இரண்டு பட்டு நிற்பதிலே வல்ல இனம் நாங்கள்
கண்டம் விட்டு வந்தும் தொலையவில்லை குணங்கள்
வண்டுகளாய் எம்மை நசித்துப்போடும் உலகில்
உண்டு பண்ண வேண்டும் உரிமை காணும் வழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

அன்புக்கு வழிகாட்டி
அழகாகக் கரம் பூத்து
அர்ப்பணம் ஆகுவீரே,
அன்றாடம் தெய்வத்தை
வழி பாட்டு முறையாகி
வந்தங்கு அருளாகப் சொரிவீரே!

பண்பாட்டு மக்களின்
உள்ளத்தை வெளிக்காட்டும்
உயர்வான பொருள் நீரே
நறுமணம் தனைவீசி
இதமான சுகம் தந்து
ஏற்ற உவமையாய் இருப்பீரே!

மணம் சூடி வரும்போது
மனம்தன்னை இணைக்கின்ற
மாலையாய் பொலிவுற்றே
புகழ் ஓடி வரும்போது
புகழ்கின்றோர் மனமாகி
புகழ்வீசி வாழ்வீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ஓடி விடும்போது
புறக்காட்டும் உறவாகி
மலர்வலையாய் வந்து துயர்வீரே
இருள்பட்ட தேசத்தில்
தியாகிகள் பாதத்தில்
பரந்தங்கு புனிதத்தை அடைவீரே!

வண்ணங்கள் பலகொண்டு
வையகமெங்கெங்கும்
கண்டும்மை நெஞ்சம் மகிழ்வோமே
இன்பத்தில் துன்பத்தில்
இணைகின்ற நின் பண்பு
இதயத்தில் வைத்தென்றும் துதிப்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கொட்டியா எக்கக்!'

'அன்னா...
தவ கொட்டியா எக்கக் ஆவா'
(அந்தா... இன்னொரு
புலியொன்று வந்தது)
என்று
ஆத்திரம் மீதூர
பிள்ளை பெற்ற அந்தப்
பச்சை உடம்பை
அடித்த அடிகண்டு...

ஐயையோ..
இப்படியுமோர் இனவெறி
எந்த லோகத்திலும்
கண்டதில்லையென அஞ்சி
அடுத்தடுத்த கட்டில்களில்
பிரசவத்துக்காய்
படுத்திருந்த
தமிழ்க் கர்ப்பிணிகள்
அடுத்தநாளே
எடுத்தனர் ஓட்டம்.

புதிய செய்தி இது;
உலகம்
புரிந்து கொள்ளவேண்டிய
செய்தியும்.

பெண்மையின் ஜீவனே
ஜீவனைச் சுமக்கும்
தாய்மைதானென்று
பத்தியங்கள் விரதங்கள்
பல்வேறு இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமொடுக்கி
சிவனை நினைந்து
சீவனை வருத்தி
தன் -
உயிர்ப்பின் உயிர்ப்புக்காய்
காத்திருந்தாள் அத் தமிழ்
கர்ப்பிணிப் பெண்.

அன்று-
சூல்முற்றி
சுண்டியிழுக்கும்
சூதக வலிகண்டு
'தர்மிஷ்ட' அரசின்
மகப்பேறு மருத்துவ மனையில்
அனுமதிக்கப் பட்டாள்.

இராகுகாலம்
எமகண்டம் கடந்து
அஷ்டமி நவமியில்லா
நல்லோரையில்
பீறிடும் அழுகைக் குரலுடன்
தலை நீட்டி
அவதாரம் செய்ததொரு
ஆண் குஞ்சுப் பிஞ்சு

அட...
அந்தத் தாதிக்கேன்
அவ்வளவு கோபம்?..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பளம்

முப்பது நாளும்
மூச்சுத் திணர உழைத்து
முதலாம் தேதி வரும்
சொற்ப சம்பளத்தில்-


விட்டு வாடகை,
பால் பாக்கி,
பேப்பர்காரன்,
மளிகை சாமான்,
மருந்துக் கணக்கு.
பள்ளிக்கூட, டியூஷன் ஃபீஸ்
என்றிப்படி —

வானம் வரை ஏறிநிற்கும்
விலைவாசிக்கேற்றறபடி
பட்ஜெட்போட்டு
துண்டுவிழும் தொகைப்பார்த்து
விழி பிதுங்கி நின்றாலும்
அன்று மட்டுமேனும்
பிள்ளைக்கு வாங்கும்
ஸ்பெஷல் தீனிகளும்
பெண்டாட்டி முகத்தில்
பொலிகின்ற புன்சிரிப்பும்
பெருமிதம்தான்
முன்பெல்லாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது....
சம்பளிக்கவரைப் பெற்று
கையெழுத்துப் போட்டுத்
திரும்புகையில்
பக்கமிருந்து
பார்த்துக் கொண்டிருக்கும்
'நண்பர்கள்'
''ஏய்...
இதில் கொஞ்சங்
கொட்டியாக்குத்
தாறதுதானே...?
அதுக்கு மொத
எனக்குங் கொஞ்சம்தா''
என்று
சிங்களத் தமிழ் பேசி
சில ரூபாய் நோட்டுகளை
பிடுங்குகையில்
'ஈரல்குலையை
பிடுங்கியது' போலொரு
பீதி....?

போராளிக்குக் கொடுக்கத்
துணியாத மனம்...
எதிராளியைக் தடுக்கத்
துணிவில்லாத கைகள்...
கொழும்புத் தமிழனுக்கு
ஈரம் சுரப்பதும்
வீரம் விழைவதும்
எப்போது....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மது

என்னருமைக் காதலியாய்
என் இள வயதினிலே
இதயம் புகுந்தவளே
ஏழையாய் தினமென்னை
கடன் பளு சுமையழுத்த
அலையவும் விட்டெந்தன்
வாழ்வைச் சீரழித்தவளே
உன் மன உறவினால்
என்னினிய இல்லாளும்
உற்ற பல உறவுகளும்
நல்லெண்ண நண்பர்களும்
நினையாமல் போனாரே என்னை!

எங்கெங்கு பார்த்தாலும்
அங்கிருந்து வாவென்று
அழைத்தென்னைக் கவர்வாய்
நீயில்லா விட்டாலோ
நிம்மதியோ தூக்கமோ
இருப்பதில்லை எனக்கும்
பகலிருந்து நிசிவரை
என்னிரு கரமிருந்து
கதைப்பாய் சிரிப்பாய்
என் உடல் உழைப்பையெல்லாம்
வாரி வாரியே தினம்
உனக்காகவே இறைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையிலிருந் தெல்லாம்
விரட்டப்பட்ட காலமெல்லாம்
விசரனாய்ப் பலர் பழிக்க
வீதிகளில் கிடந்தேன்
கல்விச் சிறப்பிருந்தும்
காடையனாய்க் கணிப்புற்றேன்
பொல்லா வுன்நட்பால்
பெயர் புகழிழந்தேன்
உடல் வலுவிழந்தேன்
உயிர் வாழும் நாளிழந்தேன்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள் இல்லார்க்கு

*தென்றலாய் வந்தென் உள்ளம் புகுந்தவளே*
*தேடரிய செல்வமதை தேடியதாய்ப் பிறர்சொல்ல*
*தேவதையே வந்ததென உவந்து அகம் மலர்ந்துநிற்க*
*தேளாய் உரு மாறி என்னைக் கொட்டுவதேனடியோ?*

*கல்லானாலும் புல்லானாலும் தொழுது நிற்கச் சொன்னேனா?*
*செல்லாக் காசாகவுன்னை வலு விலக்கிப்பார்த்தேனா?*
*பொல்லாவிவ்வுலகில் பொருள் தேடாக்காரணத்தால்*
*முள்ளாய்நின்று மனம் குத்துவ தேனடியோ?*

*வேலான விழியவளே வாள்போல் கண்வெட்ட*
*வில்லாய் வளைந்து உடல் எலும்பாகி நிற்கையிலே*
*'செல்லால்' அடிபட்டுத் தினம் செத்து உயிர் போவது போல்*
*உன் 'சொல்ச்'செல் பட்டு உயிர் போவதுதான் ஏனடியோ?*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வருங்காலச் சிட்டுகள்

*சின்னச்சின்னச் சிட்டுகளே சிறகடித்து வாருங்கள்
இரண்டுபட்ட உலகையிங்கு இணைத்துவைக்க வாருங்கள்
வண்ணவண்ணச் சிட்டுகளே விரைந்தோடி வாருங்கள்
வன்மையாளர் நெஞ்சில்நீதி விரவச் செய்ய வாருங்கள்.*

*கண்களுக்குள் இருளிருந்தால் விடிவு தோன்றுமா?
உண்மைகளை உளம் மறந்தால் உணர்வுகாணுமா?
வன்முறைகள் தொடர்ந்திருந்தால் வாழ்வு தேறுமா?
வளங்களெல்லாம் அழிந்துவிட்டால் நாடு தாங்குமா?*

*இல்லையெனும் கொடும் முறைகள் இன்னும் வாழ்வதேன்?
எல்லைகளைப் போட்டு மனம் சிறையில் சாய்வதேன்?
முல்லைகளே உங்கள் கையால் உலகே மாறட்டும்
கல்லையொத்த மனிதர்மனம் கசிந்தே சுரக்கட்டும்*

*கொடும் பகைமை வேரறுக்க விரந்து செல்லுங்கள்!
நெடும் பனைகள் போல் எழுந்து நிமிர்ந்து நில்லுங்கள்!
உடும்புகளாய் இருப்பவரை உசுப்பி வையுங்கள்!
இடும்கொள்கை பொதுமையென உணரச் சொல்லுங்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் கதை...

*ஆணவம் திணற ஆத்திரம் தலைக்கேறி*
*'ஆண் பிள்ளையா நீ?' என்ற அப்பனின் வார்த்தைகள்*
*இடியாய் வந்தென் இதயத்தைத் தாக்கியது*
*'தாடி வளர்த்தவனின் தத்துவத்தைப் படித்து விட்டு*
*கூடிக் கூடிப்பேசிக் குதர்க்கங்கள் செய்யாதே' என்றார்.*

*'அன்புதான் இன்பஜோதி; அறவழிகள் அழிவதுவோ?*
*சாதி மதமில்லை சீதனமேன் வாழ்வதற்கு?'*
*என்கின்ற வார்த்தைகளை இன்றோடு மறந்திடென்றார்*
*காற்றில் தொற்றி வந்து பிறந்தாயே எனக்கென்று*
*நாயே பேயே என நச்சரித்துத் தினம் நின்றார்.*

*பேரரசோ சிற்றரசை பேரம்பேசி வரி கேட்கும்*
*பாதகச் செயல் போல் பரம்பரையாய்ச் சுமந்து*
*பாதை வழிச் சேறுகளை பெற்ற அப்பன் நின்று*
*பெருமையாய்ப் பேசிக் கொண்டார்.*
*'வந்த திருமணமோ வரதட்சணை அதிகப்படி*
*நீ நினைத்தவள் ''யாரோ''? நிச்சயமாய் மறந்துவிட்டு*
*நம்குலப் பெருமைகளை நாம் காக்க வேண்டும்' என்றார்.*

*'நான் பார்த்த பெண்ணைத்தான் நீ முடிக்க வேண்டுமிங்கு*
*நாளை விடிவதற்குள் நல்ல பதில் சொல்லி விடு*
*இல்லையென்றால் இவ்வீட்டில் இழவுதான் நடக்கு'மென்றார்.*
*நின்றேன் நிலை தடுமாறி என்னவளை எண்ணிமனம் வேக*
*அப்பாவின் வார்த்தைகளோ அவள் நெஞ்சில் அம்பாகி*
*அய்யகோ! அவள் சாய வெய்யிலில் புழுவானேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை

*கனி.. தேனாகவும்...*
*கத்தி... வாளாகவும்...*
*கல்... முள்ளாகவும்...*
*கலந்து இருப்பீர்கள்...*
*ஒலி வரிசை*
*மாறி வந்தால்*
*மோகனத்தையும்*
*முகாரியாக்கிவிடுவீர்கள்.*

*நாக்கு அரங்குகளில்*
*தினம்*
*நாடகமாம்*
*நடிகர்கள் நீங்கள்*
*மன அகராதிக்குள்ளிருந்து*
*மலர்களை அணைத்து*
*மலைகளையும்*
*அசைப்பீர்கள்*
*பல்வித*
*இலக்கிய வழிகளில்*
*பயணம் செய்வீர்கள்*
*வேத.. புராண...*
*இதிகாசங்களாகி*
*பழைய நம்பிக்கைகளை*
*விதைத்தும் நிற்பீர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசுக்கப்பட்ட மக்களின்
உரிமைக்குரலாக
நாளும் ஒலிப்பீர்கள்
விதம் விதமான...
விஞ்ஞான விடயங்களை
எடுத்துச் சென்று
உலக முன்னேற்றத்திற்கும்
பாடுபடுவீர்கள்.

கவிஞர்கள்
காலங்களைப் பார்க்கும்
கண்ணாடியாகவும்
மனங்களில் இனிக்கும்
கவிக்குயிலாகவும்
சிறகடிப்பீர்கள்.
தவிக்கும மனதிற்கு
தாவி அணைக்கும்
ஆறுதல் மருந்தாயும்
ஒத்தணம் இடுவீர்கள்.


காற்றுப் பகிஷ்கரிப்பு
நடத்த.
செவிகளில் புகமுடியாமல்
திண்டாடிக்கிடப்பீர்கள்
கட்சிகளோடு
கூட்டுச் சேர்ந்து
அவர்களை கொள்கைக்காய்
கோலோச்சி வருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவறை முன் சென்று
ஒருவருக்கும் புரியாமல்
ஓமகுண்டம் வளர்த்து
பெண்ணடிமைத்தனத்திற்கு
ஆமாப் போடுவீர்கள்
மந்திர தந்திரங்களாகி
மனிதரை ஏமாற்றி
மாயவித்தையும்
காட்டி வருவீர்கள்

நாளேடுகளில்
அமர்ந்து கொண்டு
நம்பிக்கையையும்
சுமைகளையும்
தருவீர்கள்
நாளைய விடிவிற்காய்
நாளும் பொழுதும்
கரத்தை வரித்து
அள்ளிக் குவிப்பீர்கள்

தாயின் குரலில்
இனிய தாலாட்டய்
நீங்கள் இருப்பீர்கள்
தாயை இழந்து
தவித்துப் புலம்பும்
எங்கள் சோகக் குரலாய்
எங்கும் ஒலிப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளியே

கண்களால்...
காணமுடியாத உன்னை
மரம்.. செடி.. கொடிகளின்
அசைவால்
புலன்கள்
உணர்ந்து கொள்ளும்.

காலத்திற்கேற்ப
குளிரையும்
வெப்பத்தையும்
சுமந்து
சில
நாற்றங்களையும்
கொண்டு வருவாய்.


உன்
மண்டலத்தை
தொழிற்சாலைகள்
பல
அழுக்காக்கி வைப்பதால்
இன்று... நீ
அதிகம்
அசுத்தநோயால்
பீடிக்கப்படுகிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்களுக்கும்
உயிரினங்களுக்கும்
அவசிய
மூலகமாகி
மனித
கண்டுபிடிப்புக்களுக்கும்
உபயோகமாவாய்.

மெல்லமாகவும்
வேகமாகவும் வீசி
உலகை
ஆற்றியும்
ஆட்டியும் வைப்பாய்.


இலக்கியங்களில்
மன இயல்பிற்கு
உவமையாகி
செய்திகளை
வான் அலையாக்கி
கொண்டு செல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்நியாமாகவே
நினைக்கும்
இந்த
மனிதர்கள் மத்தியில்
நாளை
நானும்-உனக்கு
அந்நியமாகிப் போகலாம்.

எங்கிருந்து
உன்னை
முதன்முதலாய்
உள்வாங்கிக் கொண்டேனோ
அங்கேயே!
உன்னை இறுதி மூச்சாக
விட்டு விட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையறுப்பீர்

*சிவபெருமான் போல்*
*இடப்பக்கம் வைத்துன்னை*
*என்*
*இஷ்டம் போல் வழிநடத்தி*
*ஓர் அஃறிணைப் பொருளாகக்*
*கருதி வைக்க விரும்பவில்லை.*

*சேவகம் செய்யவே*
*பிறந்தவள் பெண்ணென்று*
*வேத... புராண... இதிகாசம்*
*இயம்பிடும்*
*பொய்க்கதையுரைத்து*
*எஜமானன் போலிருந்து*
*ஆட்சி - அதிகாரம் பண்ணி*
*அடக்கி வைக்கவிரும்பவில்லை.*

*வகை... வகையாய் சொத்தோடு*
*வரதட்சணை வேண்டி*
*வரனாகி வனிதையை*
*வாழ்வுக்கு கரம்பிடித்து*
*விகுணனாய் விதியுரைத்து*
*அடி தொழும் ஆதி வழக்கை*
*ஆதரிக்க விரும்பவில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு நெறி 'அது'
பெண்ணுக்கு என்னும்
பெருமைகள் கூறி
அம்மியில் கால் வைத்து
அருந்ததியைப் பார்த்து
ஓமகுண்டம் வளர்க்கும் அந்த
அநாகரீகச் சாட்சியத்தை
கேட்டு வைக்க விரும்பவில்லை.

''ஆணுக்குப் பெண்''
சமன் என்னும் கருத்தை
ஏற்காத எச்சட்டத்தையும்
ஏற்று என் வாழ்வில்
ஒரு சர்வாதிகாரியாகி
எப்பெண்ணின் வாழ்வையும்
சீரழிக்க விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சுலோகம்

ஆசையே அனைத்தின் மூலம்
ஆறு; அமைதி கொள்!
பூசனை ஏதும் வேண்டாம்
பொய்; மெய்யே என்றும்
பேசுக; பிறஜீவ ராசியையும்
புரிய மோடன்பாய்
நேசிநீ; இவ்விரண்டு
ஆசையும் நேசமும் ஒன்றல்ல

கொல்லாமை அன்றி
அறம்வே றல்ல
சமாதானம் - சகோதரத்வம்
சாந்தியே உலகவேதம்
சாத்விகம் ஞானபோதம்

என்றெல்லாம் புதிய
சேதிகள் சொன்ன
கௌதம புத்தரின்
'கனிஷ்-' சீடர்கள்

ஞாயிறு வேதபாட
வகுப்புகளில் இந்த
ஞாயங்கள் போதிக்க மறந்து
இனத்துவேஷக் கனல்தூவி
ஆக்ரோஷ வார்த்தைகளால்
காற்றை விசிறுவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் நாள் காலை
ஞாயிறு உதிக்குமுன்னே
'சின்ன' நெஞ்சங்களில்
சட்டென்று பற்றிய தீ
விஸ்வரூபமெடுத்து
விழுங்கிய கட்டிடத்துள்
தீய்ந்து கிடந்த தமிழ்ப்
பிணங்கள் எத்தனை?
சாய்ந்த கிடந்த
மரங்கள் எத்தனை?
கால் நடைச்
சாவுகள் எத்தனை?

தனியார் தொழிற்சாலை
அரசு அலுவலகங்கள்
சொந்த நிறுவனங்களில்
உழைப்பைச் சிந்திய தமிழர்கள்
சிந்திய குருதியும்
செங்கடல் போலொரு
தோற்றமெடுத்தது கொடுமை!

தகரடப்பா கடைகள் முதல்
தங்க நகை மாளிகையும்
திட்டமிட்டே
கொளுத்தப்பட்டன.

அன்று...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கையில்
அனுமனிட்ட தீ
அநீதியை
அழித்தாம்.

இன்று...
மனித உருவில்
அரக்கரிட்ட தீ
மனித நேயத்தைப்
பிடிசாம்பராக்கிக்
குருதிப் புனலில்
கரைத்து விட்டது!

கொள்ளையும் கொலையும்
கற்பழிப்பும் சூறையாட்டமும்
தர்மிஷ்ட அரசின்
தார்மீகக் கடமைபோல்
செவ்வனே நிறைவே(ற்)ற
சிறுமதியர் புடைசூழ
வாக்காளர் பட்டியலில்
தமிழ் முகவரி மட்டும்
அடையாளம் காணப்பட்டு
அம்சமாய் நடந்தேறின.

அகதி முகாம்களாய்
அவசரமாய் உருமாறிய
அனைத்து ஆலயங்களிலும்
அடுத்தடுத்த பள்ளிக் கூடங்களிலும்
அரைவயிற்றுப் பசிபோக்க
கைக் குழந்தையுடனும்
இருகைகள் ஏந்தியபடி
குறுகிக் கூசிய மனதோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகவிழ்ந்து வரிசயில்
தடுமாறிச் செல்கின்ற
தமிழரின் நிலைகண்டு
தரணி முழுவதும்
அதிர்ச்சி பரவிற்று!

இன்னும்...
என்னென்னவோ
கொடுமைகள்!
சொல்லவோணாத்
துயரங்கள்.

எழுபத்தேழின்
ஆவணி அமளியும்
எண்பத்து மூன்றின்.
ஆடித் தேரில்
அமுங்கிப் போயின!
அவ்வளவு கொடுமை....
அன்று... திங்கள் நாள்...
புதிய ஸ்லோகமொன்று
கௌதமர் பேரால்
உச்சரிக்கப் பட்டது:

Sunday sill
Monday kill



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம்

அனுபவங்களின்...
நினைவுகளின்...
இனிய தொகுப்பு...
எண்ணி... எண்ணி...
பார்க்க முடியாத
எண்ணற்ற பக்கங்கள்

கண்ணீர்...
வியர்வை...
உதிரம்...
மையாகி
உணர்வு என்னும்
எழுத்தாணி கொண்டு
எழுதப்படுவது.

தேடல்கள்...
சிந்தனைகள்...
தெரிவாகி
விரிவாக்கப்படும்
உளத்திரட்டு.

யாராலும் பார்த்து
படித்து
உடன்
புரிந்து கொள்ளமுடியாத
மிக மிக....
ஆழமான
பல்கலை நூல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களாகி வரும்
கதையோ....
கட்டுரையோ....
கவிதையோ....
எந்த
இலக்கிய மானாலும்
இதன் பிரதிகள் தான்
அவை.

ஒவ்வொரு நாளும்
தனது
பக்கத்தை
திறந்தே வைத்திருக்கும்
இதில்
கிழிபட்டு....
கீறல்பட்டு...
அழிபட்டு...
கசங்கிய பக்கங்களும்
உண்டு.

இன்னுமின்னும்
வெறுமையாகவே
பல பக்கங்கள்
இங்கு......

அன்பு....
பாசம்...
காதல்...
பிரிவு....
எங்கள்
தேசம் பற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் வாழ்கிறார்கள்

அசலும் போலியும்
தெரியாத
வாழ்க்கையின்
அத்தியாயங்கள் -

உண்மைகள்
மறந்துபோக
ஊமைகளாகும்
மனிதமனங்கள் -

வாழ்க்கையை
அறுத்து வைக்கும்
கோரவாளாக
எங்கும்
அநியாயங்கள்

கிட்லரும்
முசோலினியும்
என்னவானார்கள்?
அவை
வரலாற்றின்
துயரவரைவுகள்!

சொல்லும் வலிக்கிறதே
சொல்லமுடியாத
வேதனைகள்
நாட்டிலும்
வீட்டிலும்
இன்று சர்வாதிகாரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

*ஊசிக்குத்தாய்*
*உடல் தசைகளை*
*ஊடறுக்கும் சீதளம்*
*உடம்பையே*
*உலுங்க வைக்கும்*
*பனியின் பயங்கரம்*
*எங்கள் மண்ணில்*
*எதிரியைப் போல்*
*அதுவும் தாக்கும்*

*காகம், குயில், சேவல்*
*இன்ன பல*
*பறவைகள்*
*பண்ணிசைக்க*
*காலை புலரும்*
*கனவுக் கண்களில்!*


*அலாம் அலற*
*வாகனம் உறும..*
*மேல் வீட்டுக்காரன்*
*சாமான் சக்கட்டை*
*கீழே போடும்*
*ஆக்கினை ஒலிகளிலே*
*துயில்கலையும் காலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல்பொழுதும்
தொடர் பணியில்
தோய்த்துப் பிழியும்
துணியாக
பணம் பணம்
என்றே
நம் தேகம்
உருக்குலையும்.

அதிவேக வாழ்க்கை
ஆயுள் எல்லையை
எழுபது என்றால்
முப்பத்தைந்தில்
முடித்து வைக்கும்
இதுதான் வாழ்க்கையா?

ஏன், இந்த
வாழ்க்கை?
ஏன் இந்த
அவதி?
வாழ்வதற்கா
வாழ்வென்று
சொல்லிச்
சாவதற்கா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம்

நான்
உங்களின்
உயிர்நாடி
அறிந்து கொள்!
ஆணவமே

எனது பார்வை.
நான்
''பண்ட மாற்றை''
மாற்றிமைத்து
பண்டங்களுக்கு
விலை என்னும்
''விதியை''
இட்டவன்.

நான்
தனிக்குடும்பம்
சொத்துரிமை
அரசு
தோன்றிய
காலந்தொட்டு
சுரண்டும்
ஆதிக்கத்திற்கும்
வலது கரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
தலையெடுத்ததன்
பின்புதான்
உலகில்
பிரிவுகளும்
பிரச்னைகளும்
அதிகம்!

நான்
இல்லாவிட்டால்
அரசியல் என்ன
அதிகாரம் என்ன
என அறியாது
அலைவார்கள்.

நான்
சர்வவல்லமை
படைத்தவன்
அன்பு... பாசம்...
அறிவு... குணம்...
உண்மை... நேர்மை....
அனைத்தையும்
குப்பையில்
கொட்டிவிட்ட
'சுத்தவான்'!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
கடன்பட்டோர்
நெஞ்சத்தில்
கலக்கமாகவும்
லோபியின்
உள்ளத்தின்
கல்லறையாகவும்
குடியிருப்பவன்.

நான்
இருக்க... இருக்க
அவ்விடம்
கோபுரமாகும்
விலக...விலக...
மண் குடிசைகளாகி
ஈற்றிலே வெறும்
மேடுகளாய்ப் போகும்.


நான்
சில அரசியல்வாதிகளுக்கு
லஞ்சமாகவும்
சீட்டுக்காரருக்கு
நோட்டுக் கட்டாகவும்
வட்டி நாடுவோருக்கு
குட்டி போடுவனாகவும்.
அற்புதங்கள் நிகழ்த்திக்
காட்டுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
அகந்தை பிடித்தவன்
எப்படியும் பேசுவேன்
எப்படியும் வாழ்வேன்
எதையும் செய்வேன்
என் அகந்தையின்
அழிவுகளே
என் பெருமைகள்!

நான்
ஒரு
அடக்குமுறையாளன்.
காதலா!
கல்யாணமா
அதிலும்
என்
அருள்தேவை!

கண்ணிருக்கப்
பார்வை எடுப்பேன்
சதையிருக்க
குருதி குடிப்பேன்
கால் நடக்க
தலையையே எடுப்பேன்
நான் நாகரிக
உலகில் எதற்குமே
நிகரானவன்
நானில்லாவிட்டால்
பாவம்,
என்னைப் படைத்த
மனிதனோ
பிணமானவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேர்களைத் தேடி

அனைத்தின் அனைத்தும் இழந்தும்
உயிர்ப்பின் ஒரு மூலையில்
ஒடுங்கிக் கிடக்கும்
நம்பிக்கைகளுடன் நாங்கள்
ஓடித் திரிவதும்
சுற்றித் தவிப்பதும்
எங்கள் வேர்களைத் தேடி....

உழைப்பாளிகளாய்
ஊனுருக்கியதும்
புத்தி ஜீவிகளாய்
வெள்ளைக்காலர் உத்யோகங்களின்
உயர்பதவிகளில் உட்கார்ந்து
நிர்வாகம் செய்யவும்
எங்கள் குற்றமல்ல.

பொறாமைக் கடலில்
முத்துக் குளிக்க முயன்றும்
இயலாமையின் வெளிப்பாடுகளால்
இனவாதம் தலைதூக்க
இலங்கைத் தீவு முழுவதும்
இரத்தக் களறியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்மட்டும்
பனை நாடுவிட்டுப்
பனிரோடுகள் ஏகும்
பரதேசிகளானோம்.


தாயக மண்ணில்
தடியடி பட்டுத்
துரத்தப்பட்ட யூதர்கள்
ஆலமரத்தின் விழுதுகளாய்
அயல்நாடுகளில் கிளைபரப்பியும்
ஆணிவேரைக் கண்டு பிடிக்கும்
அக்கினிப் பரீட்சையில்
ஆக்கினைகள் தாங்கினார்

சல்லிவேரையும்
சட்டெனக் கண்டு
ஒன்று திரட்டி
முறுக்கிக் கட்டி
எதிரியைத் தாக்கி
தமக்குரியதைக்
தக்கவைத்துக் கொண்டனர்.
பிறர்க்குரியதையும்
பறித்தெடுத்துக் கொண்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனம் கண்டு
யூதர் என்றார்;
சீறும் தமிழரும்
ஆட்சி வெல்வார்.
மண்ணின்
மெய்யான மைந்தரெவரும்
மனந் தளர்ந்து போவதில்லை.

தமிழர் மண்ணில்
தாயடி வேர்கள்
மீண்டும் துளிர்த்தல்
....
வேர்களைத் தேடிய நாங்களும்
விதையாகியேனும்
உரமாகியேனும்
பழைய பூமியை
வென்றெடுப்போம்
புதிய மலர்களாய்
துச்சிரிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினி

*பஞ்ச பூதங்களில்*
*ஒன்றாக*
*இப்பூமியிலே*
*பிறந்தாய்.*

*ஆதிமனிதன்*
*கற்களை*
*உரசிய பொழுது*
*உன்னை*
*இனம் கண்டான்.*

*அவன் வாழ்வில்*
*இன்றியமையாத*
*ஒரு*
*சக்தியாக*
*தாய்; வாழ்ந்தாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் வழிச்
சமுதாயம் சீரழிய
ஆணாதிக்கம்
உருவெடுக்க
அடுப்புச் சிறையில்...

பெண்களை
நாளும் பொழுதும்
பொசுக்கிக் கருக்கினாய்.


குழு வாழ்க்கை
முடிந்து
நிலவுடமை சார்
சமூக வாழ்க்கை
உதயமானதும்
வேதியின் விதித்த
வழி நின்று
வனிதையின்
கற்பிற்கு மட்டும்
நீ சாட்சியானாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கு முறைகள்
பெண்ணடிமை-
இனஅடிமை-
ஆக்கிரமிப்பு.
வன்செயல்கள்
அனைத்துக்கும்
துணைபோகவா
நீ மனிதகுலத்தின்
அதிதேவதையாய்
பூஜிக்கப்படுகிறாய்?

நீ அனைத்திலும் புனிதம்.
மாசில்லை;
மறுவில்லை;
அலனத்துக்கும்
அருள் பாலிக்கும்
சக்தி.
அறச் சக்தி;
ஆக்கச் சக்தி!

அநியாயத்தையும்
அக்கிரமத்தையும்
சுட்டெரிக்கும்
உரிமையை மட்டும்
உனதாக்கிக் கொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னால் முடியும் பெண்ணே

நிலம் பார்த்து
நிதம் குனிந்து
குட்டுப்பட்டுது
போதும் பெண்ணே
நிமிர்ந்து நட!


உன்னுள் மௌனமாய்
கனன்றிருக்கும்
நெஞ்ச நெருப்பை
வெளியில்
கொண்டு வா!

வழிந்தோடும்
விழி நீர்க்கும்
விடைகொடு!
விழித்தெழு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லானாலும்
கணவன்
புல்லானாலும்
புருஷன்
எனத் தொழும்
கயமைகளை
உன் பாதங்களின்
கீழே போட்டு
அழுத்தி மிதி!

கலாசாரம்
பண்பாடு
மரபு வழி போட்ட
கால்க்கட்டுக்களை
உதறிவிடு;
வேலியைத் தாண்டு
கட்டுகளை உடை
வெட்கம் தவிர்
வேளியுலகை அறி!
விரிந்து வானத்தில்
சிறகுகளை விரி
விரைந்து செல்
விடியலும்
வெளிச்சமும்
உனதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலி

காதலின் சுகத்தில்
அனைத்துக்
கவலையும் மறந்து
காதலி பாதந்தொட்டு
அவள்
கனிவில்-
கள்ள முத்தத்தில்-
கை அறைந்த
இன்ப சுவைப்பில்
சூழல் மறந்து
வீட்டில்
சுற்றி நிற்கும்
பொறுப்புகள் மறந்து
'கன்னி உன்
கடைக்கண் பார்வை முன்னே
மாமலையும் ஓர் கடுகாம்'
என்று
பாரதி வசனம் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை அவமே
கழித்தவனுக்குக்
கடிதில் வந்த
வெளிநாட்டு உத்தியோகம்
கௌரவத்தைக் கூட்டிக்
காண்பித்தது.

மகளை ஒருவனுக்கு
மணமுடித்து வைக்க
மகனை மணமுடித்து 'வர'
மங்கை 'தட்சணை'யாய்க்
கொண்டுவரும் தொகையை
ரூபாய்களில் கணக்கிடும்
காலங்கள் மறந்து
அமெரிக்க
டாலர்களில் எண்ணக்
தொடங்குகிற
நேரம் வந்து
எத்தனையோ காலம்...!
அதிர்ஷ்ட வசமாய்
இவனுக்குக் கல்யாண
வயசு வந்ததும்
இந்தக் காலம் தான்.

அண்ணனை 'வதுவை' செய்யும்
அண்ணியின் அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அல்லது அவர்
அண்ணன் தம்பி
அனுப்பி வைக்கும்
சீதனத்தை எதிர்பார்த்துத்
தங்கை இவளும்
அண்ணனைத்
தாங்கு தாங்கென்று
தாங்குவாள்.
மகனின்
காதல் லீலைகள்
செவிவழிச் செய்தியாயும்
கட்புலன் காட்சியாயும்
அறிந்து வைத்திருந்தாலும்
காதலுக்குச் சமாதிகட்டி,
கைநிறையக் கொண்டுவரும்
கன்னியை மணம்பேசிக்
காத்திருப்பர் பெற்றோரும்.

பெற்றோரின் சொற்தட்டா
பிள்ளையும் 'கடமை' எண்ணி
'பார்க்'கிலும 'பீச்'சிலும்
படத்தியேட்டர், கோயிலிலும்
காதலிக்குச் செய்து கொடுத்த
சத்தியங்கள் மறந்து விட்டு
பெற்றவர் சுட்டிக் காட்டும்
பெண்ணுக்குத் தாலிகட்டத்
தயார் நிலையில் தவித்திருப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கோ...
காதலனின் கயமை
காதிலே விழுமுன்னர்
மண்ணுக்காய் அனைத்தையும்
மறுதலிக்க முன்வந்த
கன்னியவள் வவுனியாக்
காட்டிலும் கிளிநொச்சிக்
களத்திலும் கடும்பயிற்சி முடித்து,
எண்ணிய எய்துதற்கு
AK 47 எடுத்து
எதிரியின் மார்புகளைத்
துளைக்கிறாள் குண்டுகளால்

தாயக மண்ணுக்காய்
தன்னையே அழித்தல் தியாகம்-வர
தட்சணையைப் பொறுணக்குதற்காய்
காதலையும் துறத்தல் -எந்த
நியாயத்தில் சேர்த்தியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கொரு முகம் தாருங்கள்

நான்-
வீட்டுக்குப் பெரியபிள்ளை
பெயர் சொல்லி அழைத்தல்
மரியாதைக் குறைவென்றும்
என்மீதான
பேரன்பின் வெளிப்பாடாயும்
பெற்றவர்கள் என்னை
'தம்பீ' என்று அழைத்தார்கள்

பள்ளியில் நான்
படுமொக்கன்.
அத்தோடு
பெருங்குழப்படியும்
கோபத்தில் வாத்திமார்கள்
'டேய்' என்றுதான்
கூப்பிடுவார்கள்.

கூடவே,
'மெக்க'னும் வால்பிடிக்கும்
உத்தியோகக் காரனாய்
கொழும்பில்
சிங்களக் குடியிருப்பில்
வாடகைக்குக் குந்தியிருக்கையில்
முகத்துக்கு முன்னே
'மல்லி' என்றும்
முதுகுக்குப் பின்னால்
'பறதெமலோ' என்றும்
பொய் முகும் காட்டிப்
புதுப்பேர் சூட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்து முன்றின்
'பெருங் கொடை'யாய்
இந்தப்
பனிநாட்டில் குடியேறிய பின்
'அகதி' என்று
அடையாளமிட்டனர்.
எரிச்சல், பொறாமையால்
இந்த நாட்டின்சில
மண்ணின் மைந்தர்கள்
Dirty Beggal என்று
முணுமுணுப்பதும் கேட்டதுண்டு

என்
முகம்தான் எது?
என்
முகத்துக்கான
பேர்தான் எது?
மறந்தே போச்சுது.
பிறப்புக் கொப்பிபடி
என் உண்மைப் பெயரை
மீண்டும் நினைவுபடுத்த
யாராவது முன்வந்தால்
அண்டாண்டு காலமாய்
அவர்க்கு நான்
நன்றி சொல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூலை 83 நினைவு கொள்ளல்

*ஒவ்வோரு நெஞ்சத்தையும் உருக்கிவிடும் கோரத்தினம் யூலை 83*
*அப்படியொரு நாளா! என எண்ணத்தோன்றும் அந்த நாட்களை!*
*இன்று நாம் நினைவு கூர்வோம்*
*ஒப்பாரி வைப்பதற்கோ! பகமை வளர்ப்பதற்கோ அல்ல!!*

*இனியும் அப்படியொரு சம்பவம் நிகழக்கூடாது என்பதற்காக*
*தமிழினத்தின் வரலாற்றில் இரத்தப்பக்கங்களை நிறைத்த மாதம் யூலை 83*
*''தார்மீகம்'' என்று பறைசாற்றி வந்தவர்களில் கொடுங்கோல் ஆட்சியில்*
*''தாருக்குள்ளும்'' பிஞ்சு உயிர்கள் வெந்த வரலாறு அது!*

*கண்ட... கண்ட... இடங்களில் எல்லாம் தமிழரை கட்டியணைத்தனர் கயவர்கள்*
*எப்படித்தெரியுமா? கத்தியால், வாளால், துப்பாக்கிகளால்தான்*
*வீடு... வீடாயும் சென்றனர் குசலம் விசாரித்து வரவல்ல!*
*உயிர்களைப் பருகி பொருட்களை சூறையாடிக்கொள்வதற்கு*
*தமிழரின் வர்த்தகசாலைகள் கொள்ளையடித்து கொழுத்தப்பட்டன*

*திட்டமிட்டு பட்டியல் கொண்டு இரவு பகலாய்*
*தமிழின அழிப்பை நடாத்திக்கொண்டனர்.*
*தேவலாயங்களும், பள்ளிக்கூடங்களும் தமிழருக்கு காப்பிடமாய் காட்சியளித்தன*
*ஆனாலும்! அவையும் காடையரைக்கண்டு கண்கலங்கிக்கொண்டன*

*செய்திகள் துயரமாய் அன்று செவிகளைத் தாக்கின*
*செய்வதறியாது உறவுகள் கூடிப்புலம்பின*
*என்னவோ! ஏதுவோ!! என அவர்கள் இதயங்கள்*
*கரை மீனாய் துடி... துடித்துக்கொண்டன...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடி... துடிக்க தமிழர் உயிர்கள் கருகியது அங்கு
வீதிகள் எங்கும் எரிதணலாய் "கடலைக் காட்சிகள்"
ஆயிரக்கணக்கானோர் பிணங்களாய்ச் சரிந்தனர்
இன்னும் ஆயிரமாய் எங்கும் அகதிகளாகினர்

கூடித்திரிந்த நண்பனும் குழிதோண்டும் எதிரியானான்
அண்டியிருந்த அயலவரும் அத்தணரும் பகையானார்
வண்டியிழுத்த முருகேசும் "புலி" எனப்பலியானார்
நொண்டித்தனபாலுவும் தமிழன் எனக்கொலையானான்

உடுத்த உடுப்புடன் உருக்குலைந்த நிலையுடன்
உயிரைக்காக்க திக்குத்திசை தெரியாது ஓடினர்
நாடு துரத்திட நடுக்காட்டில் பல நாட்கள்
நம்மக்கள் பட்ட வேதனைகள் ஏராளம்

கண்ணுக்குக்கண்ணாகப் பழகிய மனிதரை
கண்ணுக்கு முன்னாலே பகைவர் கொண்டனர்
எரிபொருளால் முழுக்காட்டி உயிருடன் பொசிக்கினர்
எக்காளமிட்டும்எங்கும் முழங்கினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரங்குச்சட்டத்தால் தமிழனைப்பிடித்து
உடனுக்குடன் அவனுயிரைப்பறித்தனர்
உயிருடன் கொளுத்திய எரியாத அவயங்களை
குப்பையோடு குப்பையாய் அள்ளியும் சென்றனர்

எத்தர்கள் கைகள் ஓங்கியிருந்தன
எதிர்காலமோ ஏக்கமாய் இருந்தன
மாணவர் நெஞ்சிலும் குரோதம் வளர்ந்தன
மாணவ நண்பர்க்கு இன்னலை விளைத்தனர்

பிள்ளையைக் காணாது அன்னை துடித்தாள்
கணவனைக் காணாது மனைவி தவித்தாள்
அண்ணனைக் காணாது தம்பி திகைத்தான்
இப்படி நெஞ்சங்கள் கலங்கிக்கிடந்தன...

தாய் மூக்கை அறுத்து மூக்குத்தி பறித்தனர்
கை நாக்கை அறுத்து இரத்தம் பருகினர்
தமிழன் ஆக்கை அறுத்து தெருவில் வீசினர்
எங்களை ஏக்கையாய் பேசி நித்தம் வருத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பிணிப் பெண் காரில் உயிர்தப்பி வந்தாள்
காடையர் கண்களில் அவள் பட்டுக்கொண்டாள்
உடன் சென்று காடையர் சூழ்ந்தவளை நின்றார்
உன் வயிற்றில் ''புலி'' என் ஈருயிரை எடுத்தார்

பாலகன் அழுதான் பெற்றவள் பாலென அறிந்தாள்
படுத்தவள் எழுந்து வெந்நீர் வைத்திடச் சென்றாள்
ஆலயச் சிங்களப் பாதிரி சென்றதைக் கண்டான்
அடித்தனன் காலால் உடன் அடுப்பினை உணைத்தான்

நீறாய்ப்பூத்திட நெருப்பாய்த் தினம் நெஞ்சம்
ஆறாத வடுக்கள் ஆயிரமாய் இன்னும்
சிறைக்குள்ளும் இனத்துவேசம் சீறியதால் அன்று
அதற்குள்ளும் 52 உயிக்ரள் அணைந்தன நொந்து

முப்படையும் கூடி மும்முரமாய் இன அழிப்பு நடாத்தினர்
தித்திப்படைந்த ''அரசோ'' கைகொட்டி மகிழ்ந்தனர்
மக்கள் இதயங்களில் துவேசத்தை வளர்த்தனர்
மகா மிருகமாகி மரணத்தையே குவித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினோர் கப்பலில் யாழ் வந்து சேர்ந்தனர்
தம் உறவுகளைப்பறிகொடுத்து மனம் வெம்பி நின்றனர்
சிறு பான்மை நாம் என்பதால் அழித்தொழிக்கப்பட்டோம்
எம் உரிமைகளை இழந்து அடிமைகளாக்கப்பட்டோம்.

கடவுளாய்ப் போற்றும் ''டாக்டர்கள்'' நெஞ்சிலும்
இனப்பகை நோய் முற்றிக்கிடந்தது
குதறப்பட்ட தமிழனின் உயிரைக் காக்காமல்
கடமையை மறந்தனர் கயமையைக் காட்டினர்

பருவமடையாத பச்சிளம் பெண்ணிடம்
''புஞ்சி பண்டாக்கள்'' இச்சையைத்தீர்த்தனர்
வஞ்சகர்கள் அவளது உயிரைக்குடித்தபின்
எஞ்சிய உடலை பற்றைக்குள் எறித்தனர்

ஈரின நாட்டை ஓரினம் ஆளும்
உரிமையால் நாளும் எரிந்தது நாடு
பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரத்தால்
ஓரினக் கையில் குவிந்கன அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


''மதமோ'' நிதமும் அரசியல் என்றது
மனிதாபி மானமோ மலையேறிப்போனது
''மஹா நாமாவின்'' ''மஹாவம்சப்'' பொய்யால்
மனித குருதிகள் ஆறாய்ப்பெருகின

தனிமொழிச்சட்டம் தரைப்படுத்தல் தன்னாதிக்கம்
இப்படியே அவர்கள் தமிழரை ஒடுக்கினர்
திறமையை மிதித்தனர் தீயெனப் பரந்தனர்
''இறமையோ'' தமக்கென கொடுமையை வளர்த்தனர்

இதுவரையில்! பலகலவரங்கள் நடைபெற்றுப்போயின
ஆனாலும்!! ஆறமுடியாத துயரம் தந்தது ''ஆடிக்கலவரமே''
எங்கள் ஆழ்மனதில் ஆழப்பதிந்ததும் அந்தக் கலவரமே
ஆயினும்!!!.... நாம்
ஆற்றுவோம்! தோற்றுவோம்!! ஆத்திரம் தணிப்போம்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடியிலே இனக்காற்றடித்து - பல
ஆயிரம் உயிர்கள் அழிந்தனவே
புத்தரது புனி பத்தருக்கு - அன்று
இரத்த வெறி வந்த ஆண்டிதுவே
வேதனையால் வெந்த உள்ளங்களை - அவர்கள்
இரத்தம் கேட்டு நின்றனரே
கற்பிழந்த கன்னியர்கள் - அங்கு
கருகிய மாலைகள் ஆகினரே
கடுகளவு இதயம் கொண்ட - அந்த
குழந்தைகளைக் கூட கொன்றனரே
ஒன்றும் அறியாத ஏழைகளை - நித்தம
குறிவைத்துக் கொன்றனரே - அவர்
சுட்டும் எரித்தும் கொன்றனரே
இகலார்கள் நாட்டினில் பெருகினரே - எங்கும்
இருள் வந்து சூழ்ந்தனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நா(ய்) கடிக்கும் கவனம்

*'நா(ய்) கடிக்கும் கவனம்*
*வாய் பேசா*
*அந்த*
*நன்றியுள்ள பிராணி*
*உண்மையில்*
*அப்படிப்பட்டதல்ல..*

*மா... பலா...*
*வாழையென....*
*ஏழைகளை வருத்தி*
*சுரண்டிய சொத்தையும்*
*பாதுகாக்க*
*எழுதிப் போட்ட பொய்... அது!*

*வாசலில் போட்ட*
*அந்த*
*அறிவிப்பால்*
*பயந்து யாரும்*
*அவர்*
*வீட்டு வாசலை*
*மிதிப்பதேயில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாய்
அக்கேற்றில்
தொங்கிய
வாசகத்தில்
'ய்' எழுத்து
மெய் பேச எண்ணி
மங்கிக் கால அழிவு
எய்து கொண்டது.
இப்போ அவ்வாக்கியம்
மனிதரைப் பிரதிபலித்து
பயமுறுத்தி நின்றது...

எப்படித் தான்
முப்பத்திரெண்டு
கதியால்கள் போட்டு
பலமாய்
வேலியை இட்டாலும்
வெட்டிப் பிளந்து
வெளியே வந்து
காலமோ.... நேரமோ
பாராமல்
இதயத்தை கடித்துக்
குதறி...
காயப்படுத்தும்
விலங்கல்லவா அது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி


என் கவிதைகளுக்கு
அங்கீகாரம் தந்து,
அதன் பரம்பலுக்கு
ஊக்கம் தந்த,

ஈழநாடு (பாரீஸ்)
ஈழமுரசு (பாரீஸ்)
தமிழன் (பாரீஸ்)
பாரீஸ் முரசு (பாரீஸ்)
தாமரை (பாரீஸ்)
சுமைகள் (நெதர்லாண்ட்)
ஈழமணி (ஜேர்மன்)
தமிழமுதம் வானொலி (பாரீஸ்)
ஐ.பி. சி. தமிழ் (இலண்டன்)

ஆகியவற்றுக்கு
என் இதயம் கலந்த
நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org